# கலைஞரும் நானும்

**58**

"கடவுளை வணங்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அனுபவம் போல, தன்னோடு பயணித்த ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அணுக்கத்தை உணர வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அந்த வகையில் அவர் ஒரு தீர்க்கதரிசி என்பேன் நான். மரியாதை, அன்பு, மனித மாண்பு என எல்லா வகையிலும் அவர் ஈடுஇணையற்றவர்" என நினைவு கூர்கிறார் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன்.

■ பி.வில்சன், எம்.பி, மூத்த வழக்கறிஞர்

# "வாய்யா... 'வின்'சன்!"



"கழகத்துக்கும், கலைஞருக்கும் ஒரு சோதனையான காலகட்டத்தில்தான் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு உருவானது. அப்போது முதல், பலமுறை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்தாலும், ஒவ்வொரு முறையும் வியப்புகளை அளிக்கும் ஆளுமையாக கலைஞர் இருந்தார்.

1994-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கழகத்தின் பெயர், கொடி தொடர்பான வழக்கு. நான் ஜூனியராகப் பணியாற்றிய மூத்த வழக்கறிஞர் கே.வி.வெங்கடபதியிடம் அளித்தார் கலைஞர். அவர் கலைஞரைச் சந்திக்கச் செல்கையில் என்னையும் அழைத்துச் சென்றார். அப்போதுதான் முதல்முறையாக கலைஞரைப் பார்க்கிறேன். அதற்கு முன்பு வரை கலைஞரை தூரத்தில் இருந்து பார்ப்பது, அவர் பேசுவதைக் கேட்பது என்கிற நிலையில்தான் இருந்தேன். அந்த வழக்கு கலைஞரின் உயிருக்கு இணையான வழக்கு. அந்த வழக்கில் கழகத்துக்கு சாதகமாக ஆணை பெற்றோம். அப்போது அறிவாலயத்தில் திரண்ட வழக்கறிஞர்களுடன் நானும் இடம் பெற்றிருந்தேன்.

## தன்மையா சொல்லலாமே...

கழகத்தின் வழக்கறிஞர் அணியுடன் சேர்ந்து பயணிக்கும் வாய்ப்பு அப்படித்தான் வந்தது. வலுவான தலைவர்களைக் கொண்ட வழக்கறிஞர் அணி என்பது கழகத்தின் சொத்து. சில சமயங்களில், சட்ட நுணுக்கங்களை, கலைஞரே விளக்குவார். நாம் கையாளும் வழக்குகளின் நிலை, எப்படியான வாதங்களை வைப்பது என்பதை அவரே குறிப்பிடுவார்.

ஆங்கிலத்தில் இருக்கும் வழக்கு சம்பந்தமான பிராதுகளைப் படித்துக் காட்டுகையில், திருத்தங்கள் சொல்வார். வழக்கறிஞராக நாம் அழுத்தம் கொடுத்திருக்கும் சில இடங்களில், 'இதை 'ஹார்ஷ்'ஆ சொல்ல வேண்டாம்யா, கொஞ்சம் தன்மையா சொன்னால் என்ன?' எனக் கேட்பார். அதுபோல, நீதிமன்றத்தைக் குறை சொன்னால் அவருக்குப் பிடிக்காது. நீதித் துறை மாண்பை அவ்வளவு மதிப்பார்.

பின்னர் பல சந்தர்ப்பங்களில், பல வழக்குகள் குறித்து கலைஞர் அவர்களுடன் பேசிவந்தாலும், நான் நெருக்கமானது 2006-ஆம் ஆண்டில் சமச்சீர் கல்வி தொடர்பான வழக்கின்போதுதான். நான் அப்போது 'அசிஸ்டென்ட் சொலிசிட்டர் ஜெனரலாக' ஒன்றிய அரசு வழக்குகளைக் கவனித்து வந்தேன். பின்னர் மாநில அரசின் தலைமை வழக்கறிஞராக கலைஞர் நியமித்தார்.

கலைஞர் அவர்களின் மிகப் பெரிய கனவுகளில் ஒன்று சமச்சீர் கல்வி. ஏழை, பணக்காரர் ஏற்றத்தாழ்வு எல்லாவற்றையும் கடந்து, அனைவருக்கும் பொதுவான பாடத்திட்டம் மற்றும் கல்விமுறையை அளிக்க வேண்டும் எனச் சமச்சீர் கல்வியைக் கொண்டுவந்தார். அந்தச் சட்டத்துக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

டெல்லியில் இருந்து வழக்கறிஞர்களைக் கொண்டு வந்து வாதிடலாம் எனச் சிலர் சொன்னபோது, "வேண்டாம்யா, வில்சன் பாத்துகிடட்டும்" என என்னை அடையாளம் காட்டினார் முதலமைச்சர் கலைஞர். அந்த வழக்குக்காகப் பல ஆய்வுகள், பல அறிஞர்களின் உதவிகளைப் பெற்றுக் கொண்டேன். மேலும் பல பாடத்திட்ட நூல்களில் இருந்து குறிப்புகள், பள்ளி ஆசிரியர்கள் 30 பேரின் உதவியுடன், நீதிமன்றம் மறுக்க முடியாத அளவுக்குத் தரவுகளைச் சமர்ப்பித்து வெற்றி பெற்றோம். அந்த வழக்கில் கலைஞர் அவர்கள் என் மீது வைத்த நம்பிக்கையைக் காப்பாற்றினேன்.

அதேபோல் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளுக்கு கல்விக் கட்டண நிர்ணயச் சட்டம் கலைஞர் கொண்டு வந்தார். அதை எதிர்த்து அனைத்து தனியார் பள்ளிகள் ஒன்றுசேர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து ரத்து செய்யக் கோரினர். அப்போதும் "டெல்லி வழக்கறிஞர் வேண்டாம்; வில்சன் பாத்துகிடட்டும்" என என்னை அடையாளம் காட்டினார் முதல்வர் கலைஞர். பெரும் சட்டப் போராட்டத்தில் பள்ளிக்கட்டணங்களை முறைப்படுத்தியதும் கலைஞர் அவர்கள்தான்

அதன் பின்னர் பல வழக்குகளில் கலைஞர் அவர்களின் எண்ண ஓட்டத்துக்கு ஏற்பப் பணியாற்றி இருக்கிறேன். நமது ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பல சமூக நீதித் திட்டங்களை, 2011-ஆம் ஆண்டு காலத்தில் நிர்மூலமாக்கத் திட்டமிட்டார் ஜெயலலிதா அம்மையார். முதலில் அவர் கை வைத்தது சமச்சீர் கல்வி. சமச்சீர் கல்வித் தடைக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து, உச்சநீதிமன்றம் வரை போராடித் தடை பெற்றோம். அதற்காகப் பல ஆய்வுகள், பல அறிஞர்களின் உதவிகளைப் பெற்றுக் கொண்டேன். எல்லாவற்றுக்கும் பின்புலமாக கலைஞர் இருந்தார். அந்த நாட்களில் அவருக்கு முதுகு வலிப் பிரச்சினைகள். மருத்துவ ஓய்வில் இருந்தாலும், இதைக் கவனிக்கத் தவற மாட்டார்.

அதற்குக் காரணம், தான் கொண்டு வந்த திட்டம் என்பதால் அல்ல; சமூகநீதி நோக்கி அவர் கொண்டுவந்த ஒரு திட்டம் சிதைந்து விடக்கூடாது என்கிற எண்ணம்தான். அதே போல, பெரும் சட்டப் போராட்டத்தில் பள்ளிக்கட்டணங்களை முறைப்படுத்தியதும் கலைஞர் அவர்கள்தான்.

> அவர் இறுதி மரியாதைக்குக் கொள்கை ரீதியான விளக்கங்களை நீதிமன்றத்துக்கு அளித்து இரவு பகல் வாதம் செய்து வெற்றி பெற்றோம்.

## உன் கடவுளின் விருப்பம்

முக்கியமாக, அப்போது சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாகும் பரிந்துரைப் பட்டியலில் என் பெயர் இருந்தது அவருக்குத் தெரியும். ஆனாலும், அரசுக்கு எதிராக வழக்கினை எடுக்கச் சொன்னார். நானும் அதைப் பற்றி யோசிக்கவில்லை. கலைஞர் சொன்னால் அதைச் செய்வது என்பதுதான் எனது மந்திரம்.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தை மாற்ற வேண்டும் என முடிவு செய்கின்றனர். அவருக்கு அந்தச் செய்தி கிடைத்த மாத்திரத்தில், இரவு 11 மணிக்கு போன் செய்தார். இதற்கு உடனடியாக வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்றார். "சரிங்கய்யா" எனக் கூறிவிட்டு, காலையில் ஆவணங்களைத் தயார் செய்யலாம் எனத் தூங்கிவிட்டேன். காலை 5 மணிக்கு கலைஞரிடமிருந்து போன் வருகிறது. "என்னய்யா வழக்கு தயார் பண்ணிட்டீங்களா?" என்கிறார். அந்த வேகத்துக்கு நம்மால் ஈடு கொடுக்க முடியாது. அதிலும் நாம் தடை உத்தரவு வாங்கினோம். இன்று அண்ணா நூற்றாண்டு நூலகம், அறிவு பரப்பும் சுரங்கமாக நீடித்து இருக்கிறது என்றால், அதற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைத்தான் கை காட்ட வேண்டும்.

இப்படிக் கழகத்தின் சார்பிலான தொடர் சட்டப் போராட்டங்கள், அவற்றில் வெற்றி பெறுவது என இருந்தன. ஒரு நாள் அவரைச் சந்திக்கச் செல்கையில்தான் எனது பெயரை "வாய்யா 'வின்'சன்" (WINSON) என அன்பு ததும்ப அழைத்தார்.

இப்படியான வழக்குகளால், எனக்கு நீதிபதியாகும் வாய்ப்பு அமையவில்லை என்பதைக் குறிப்பிடுகையில், ஒருமுறை சொன்னார், "நீ வணங்கும் கடவுள், நீ என்கூடத்தான் இருக்க வேண்டும் என விரும்புகிறார்ய்யா, அதனால்தான் உனக்கு நீதிபதியாகும் வாய்ப்பு அமையவில்லை" என்றார். எனக்கு நீதிபதியாகும் வாய்ப்பினை விடவும், கலைஞர் என் மீது கொண்டிருந்த அன்பு மிக உயர்வாகத் தெரிந்தது. அந்த வார்த்தைகள் எவ்வளவு தீர்க்கதரிசனமான வார்த்தைகள் என்பதைப் பின்னாளில் நான் உணர்ந்தேன். இன்று, இந்தியாவுக்கே சட்டங்களை இயற்றும் மன்றத்தில் நான் நின்று பேசுகிறேன் என்றால், கலைஞரின் அந்த வார்த்தை உயிர்பெற்றுள்ளது என்றுதானே பொருள்.

அவரது வார்த்தைக்கு, இன்னொரு வரலாற்றுத் தருணமும் இருக்கிறது என நான் உணர்ந்தது அவரது இறுதி மரியாதை நாள். அவரை அடக்கம் செய்ய நாம் நடத்திய சட்டப் போராட்டம் என் வாழ்நாளில் மறக்க முடியாதது.

மெரினாவில் பேரறிஞர் அண்ணாவுக்கு அருகில்தான் அவர் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதற்காக, அவர் இறுதி மரியாதைக்குக் கொள்கை ரீதியான விளக்கங்களை நீதிமன்றத்துக்கு அளித்து இரவு பகல் வாதம் செய்து வெற்றி பெற்றோம். அந்த உத்தரவுடன் வந்து கலைஞரைப் பார்க்கிறேன்; "நீ என்னோடு இருக்க வேண்டும் என, உன் கடவுள் விரும்புகிறார்" என்று அவர் சொன்னது நினைவுக்கு வருகிறது. இதற்காகத்தான் உங்களோடு இருக்கச் சொன்னீர்களா? என கண்களில் கண்ணீர் ததும்ப அவரின் தீர்க்கதரிசனத்தை உணர்ந்தேன். அதுதான் அவர். எல்லாவற்றிலும் அவர் தீர்க்கதரிசி..!"

...பகிர்வார்கள்

---

## பா.ஜ.க. ஆட்சியில் பெண்கள் பாதுகாப்பு!

மணிப்பூர் கலவரத்தின்போது 2 பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு இழுத்துச் செல்லப்பட்ட காட்சிகள் உலகையே உலுக்கின. மணிப்பூரில் மட்டுமல்ல, பா.ஜ.க. ஆட்சியில் நாடு முழுவதும் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகவே உள்ளது. பா.ஜ.க.வின் 10 ஆண்டு ஆட்சிக்காலம் முடியும் தருவாயில், பெண்கள் பாதுகாப்பின் நிலை என்னவென்பதை தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகள் படம் பிடிக்கின்றன.

2014-இல் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் ஒரு லட்சத்துக்கு 55.3 என்ற அளவிலிருந்த நிலையில், 2022-இல் 66.4 ஆக அதிகரித்திருக்கிறது. அதே சமயம் இந்தியாவிலேயே பணிபுரியும் பெண்களுக்குப் பாதுகாப்பான நகரங்கள் பட்டியலில் சென்னை முதலிடத்தில் இருப்பதாக, சமீபத்தில் ஓர் ஆய்வறிக்கை வெளியானது கவனிக்கத் தக்கது.

## :ப்ளாஷ்பேக்



### விடுதலைப் படம்!



கிறிஸ்டோ ஹுசைன்

1965-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்ற காரணத்துக்காக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் 62 நாட்கள் சிறைவாசம் அனுபவித்தார். அவர் விடுதலையான போது என்னுடைய தாத்தா பாளை எம்.எஸ்.ஹுசைன் அவர்கள் வரவேற்கச் சென்றார். கலைஞருக்கும் என் தாத்தாவுக்குமான நட்பு அப்படிப்பட்ட ஒன்றாக இருந்தது. தலைவர், பாளையங்கோட்டையில் எங்கள் இல்லத்துக்கு வருகை தந்த போது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**-கிறிஸ்டோ ஹுசைன்,**
**இளைஞர் அணி, பாளையங்கோட்டை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in


## கருவூலம்

### முதல் பிரிவு!

**1961-ஆம் ஆண்டு ஜனவரி 21, 22 தேதிகளில் கழகத்தின் செயற்குழுவும் பொதுக்குழுவும் வேலூரில் கூடியது. ஈ.வெ.கி.சம்பத் செயற்குழுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிப் பேசும்போது, கட்சியின் முன்னணித் தலைவர்கள் சிலருக்கு எதிராகக் கருத்துகளை முன்வைத்தார். இதனால், கூட்டத்தில் சலசலப்பு எழுந்தது. மறுநாள் கட்சியின் அவைத் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாகக் கடிதம் ஒன்றை அளித்தார். அவரை அமைதிப்படுத்தி, பதவி விலகல் கடிதத்தைத் திரும்பப் பெறுவதற்கு பேரறிஞர் அண்ணா மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 399




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131